**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு 2-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | முத்துமாரி(எ) மாரிசேர்வை | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**9.1.2024 OS No. 69/2019 பிவா.சா.2 முத்துமாரி(எ) மாரிசேர்வை ஆஜர்**
**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. செல்வராஜை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் எனக்கு சிறுவயதிலிருந்தே தெரியும். என்னை சாட்சியமளிக்க செல்வராஜ் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்ததா அல்லது செல்வராஜ் சொல்லி தயார் செய்ததா என்றால் நான் சொல்லி தயார் செய்தது ஆகும். வாதி கோயிலை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி கோவிலின் அறங்காவலர் உய்யாராணியை தெரியுமா என்றால் தெரியாது. யார் தாவா வழக்கை தாக்கல் செய்தது என்றால் ராமமூர்த்தியின் மனைவி உய்யாரணி தாக்கல் செய்தார்.

2. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். திருப்புவனத்தில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் சிறுவயதிலிருந்தே இங்குதான் உள்ளேன். எனக்கு தற்போது 63 வயதாகிறது. 64 வருடங்களுக்கு முன்பு இந்து சமய அறநிலையத்துறையின் இணை ஆணையாளர் தாவா கோவிலை பொதுகோவில் என உத்தரவு பிறப்பித்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் வீட்டில்தான் உள்ளேன். செல்வராஜ் எந்த வருடம் எந்த தேதியில் பாகவஸ்தி ஆவணம் எழுதினார் என்று சொல்லமுடியுமா என்றால் 5.3.1999-ல் எழுதினார்.

3. அதில் நான் சாட்சிகையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரிதான். பாகவஸ்தி ஆவணம் ஏற்படுத்தும்போது இந்து அறநிலையத்துறையில் எம்.பி.எண்.2/92-ல் வழக்கு நிலுவையில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பொதுவாக யார் சாட்சிகையெழுத்து போட கூப்பிட்டாலும் போவேன் என்றால் இல்லை. தெரிந்த நபர்கள் சாட்சி கையெழுத்திட கூப்பிட்டால் போவேன் என்றால் சரிதான். மொட்டையசுவாமி கோவில் எந்த புல எண்ணில் உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மொட்டையசுவாமி கோவிலை சுற்றி என்னென்ன புல எண் உள்ளது என்பது தெரியுமா

என்றால் தெரியாது.

4. நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் மொட்டையசுவாமி கோவில் மடமாக இருந்து எந்த வருடம் கோவிலாக மாறியது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து திருவேங்கடம் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்கிறேன் என்றால் நான் சிறுவயதிலிருந்து திருவேங்கடம் செட்டியார் அனுபவிப்பதை பார்த்ததால் சொல்கிறேன். நான் திருவேங்கடம் செட்டியார் பெயரில் எந்த ஆவணத்தையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். திருவேங்கடம் செட்டியார் அறங்காவலர் என்ற பொறுப்பில் அனுபவம் செய்துவருகிறார் என்றால் இல்லை.

5. அது அவர் குடும்பச்சொத்தாகும். எந்த ஆவணத்தின் அடிப்படையில் வாதி கோவில் பொதுமக்களுக்கும், இந்துசமயஅறநிலையத்துறைக்கும் உரிமையில்லை என சொல்கிறேன் என்றால் ஆவணத்தை பார்த்ததில்லை. வாதிக்கும், செல்வராஜீக்கும் குடும்ப தகராறு ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. இந்துசமயஅறநிலையத்துறை வழக்கு எம்.பி.எண்.2/92 வழக்கில் சாதகமில்லா நிலை பிரதிவாதிக்கு வருவதை அறிந்து பாகவஸ்தி பத்திரத்தை பிரதிவாதி ஏற்படுத்தியுள்ளார் என்றால் தெரியாது. அதனால் நான் சாட்சிகையெழுத்திட்டதும் செல்லாது என்றால் சரியல்ல. நான் செல்வராஜீக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு பற்றி எனக்கு எந்த விபரமும் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

**(2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் எந்த எடுத்துரைப்பும் இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.